**செ. கு. எண்: 133** **நாள்: 06.08.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி** K. **பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 6.8.2018

வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம், அலமேலுமங்காபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. இமைச்சந்திரன் என்பவரின் மகன் திரு. ரகுராமன் என்பவர் தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டம், அண்ணாசாலை காவல் நிலையம் அருகில், இருசக்கர வாகனம் மீது டேங்கர் லாரி மோதிய விபத்தில், இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த சென்னை, சேத்துப்பட்டைச் சேர்ந்த திரு. தட்சிணாமூர்த்தி என்பவரின் மனைவி திருமதி நிர்மலா மற்றும் திரு. தட்சிணாமூர்த்தி என்பவரின் மகன் திரு. மகேஷ் ஆகிய இரண்டு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும் ;

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், பொன்னேரி –II கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துமாடன் என்பவரின் மகன் திரு. காசி மற்றும் அவருடைய மகள் செல்வி ஆனந்தி ஆகிய இருவரும் பொன்னேரி கால்நடை மருத்துவமனை அருகில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, பின்னால் வந்து கொண்டிருந்த லாரி மோதியதில், திரு. காசி மற்றும் அவருடைய மகள் செல்வி ஆனந்தி ஆகிய இருவரும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் வட்டம், திட்டாணிமுட்டம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கேசவன் என்பவரின் மகன் சிறுவன் ரோகித் மற்றும் திரு. ரமேஷ் என்பவரின் மகன் சிறுவன் பாலாஜி ஆகிய இருவரும் பாண்டவையாற்றில் குளித்துக் கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக ஆற்று நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், கிழக்கு மதுரை கிராமத்தைச் சேர்ந்த திரு. சீதாராமன் என்பவரின் மகன் சிறுவன் முத்து வீரகணபதி மற்றும் மதுரை கிழக்கு வட்டம், வண்டியூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.ராமச்சந்திரன் என்பவரின் மகன் சிறுவன் அருண்குமார் ஆகிய இருவரும் 4.8.2018 அன்று சக்கிமங்கலம் உள்வட்டம், சீகன்குளம் கிராமத்தில் உள்ள கண்மாயில் குளித்துக் கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

பல்வேறு விபத்துக்களில் உயிரிழந்த **ஒன்பது** நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட பல்வேறு விபத்துக்களில் உயிரிழந்த **ஒன்பது** நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

K. **பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**